பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

07 07 2026 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசத்துக்காக தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்தகவர்களுக்கு மத்திய அரசு உரிய மரியாதையை வழங்கி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தோல் பொருட்கள் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்ய தவெக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4. மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் ஒரு சில இடங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3-வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி நாட்டிங்காமில் இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தேசத்துக்காக தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்தகவர்களுக்கு மத்திய அரசு உரிய மரியாதையை வழங்கி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஜனசங்க நிறுவனர் டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் 125வது பிறந்த தினத்தை முன்னிட்டு கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலிப் பதிவின் மூலம் உரையாற்றிய அவர், தேசத்தின் ஒற்றுமைக்காக அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் ஷ்யாமா பிரசாத் முகர்ஜி செயல்பட்டதாகத் தெரிவித்தார்.

அவரது பணிகள் தொடர்ந்து பல தலைமுறைகளை ஊக்குவிக்கும் என்று பிரதமர் கூறினார்.

தேசபக்தியின் முழு உருவமாக திகழ்ந்த அவருக்கு நாடு மரியாதை செலுத்துவதாக பிரதமர் தெரிவித்தார்.

தேசத்தின் நலனே முதன்மையானது என்ற நோக்கத்துடன் செயல்பட்ட ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் கொள்கைகளின் அடிப்படையின் தற்போதைய மத்திய அரசு செயல்பட்டு வருவதாக திரு. நரேந்திர மோடி கூறினார்.

<<<<>>>>

தோல் பொருட்கள் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தோல் தொழில் துறையினருக்கான விருது வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர், தற்போது காலணி மற்றும் தோல் பொருட்களின் ஏற்றுமதி ஆண்டுக்கு நான்கரை பில்லியன் டாலராக உள்ளது என்றார்.

இது அடுத்த 6 ஆண்டுகளுக்குள் 15 பில்லியன் டாலராக அதிகரிக்கும் என்று அவர் கூறினார்.

தற்போது இத்துறையில் 40 லட்சம் பேர் வேலைவாய்ப்பை பெற்றிருப்பதாகவும், இது விரைவில் ஒரு கோடியாக அதிகரிக்கும் என்றும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவது குறித்து மாநில உணவு அமைச்சர் திரு. வெங்கடரமணன் தலைமையில் சென்னையில் நேற்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் விலை கண்காணிப்பு குறித்து விவாதிக்கப்பட்டதாக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இது தொடர்பாக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வுக் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் குற்றப் பின்னணி கொண்டவர்களை பணியமர்த்துவதை மாநில அரசு தவிர்க்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், திருப்பத்தூர் மாவட்டத்தில் குற்றப் பின்னணி கொண்ட ஒருவரை மாவட்ட நீதிமன்றத்தின் அரசு வழக்கறிஞராக நியமித்திருப்பது அதிர்ச்சியளிப்பதாக கூறியுள்ளார்.

தவெக அரசு மீதான லஞ்சப் புகார்களை மெய்ப்பிக்கும் வகையில் இது அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆய்வு என்ற பெயரில் தவெகவை சேர்ந்தவர்கள் நடத்தும் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆய்வு செய்வதற்கான முறையான வழிமுறைகளை அமைச்சர்களுக்கு முதலமைச்சர் அறிவுறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

சீமைக் கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய வழிகாட்டுதல்களை தமிழக அரசு செயல்படுத்த வேண்டும் என்று மதிமுக பொதுச் செயலாளர் திரு. வைகோ கேட்டுக்கொண்டுள்ளார்.

திருப்பூரில் செய்தியாளர்களிடம் அவர், சீமைக்கருவேல மரங்கள் நிலத்தடி நீரை உறிஞ்சி, ஆக்ஸிஜனை தடுத்து, கார்பன்-டை-ஆக்சைடை வெளியிடுகின்றன என்று அவர் கூறினார்.

இந்த மரம் கேரளத்தில் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் எனவும் திரு வைகோ தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் நீர் மேலாண்மை திட்டங்களுக்கு முந்தைய ஆட்சியில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்தை சந்தித்துப் பேசிய பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

அடுத்த 50 ஆண்டுகளுக்கு நீர் மேலாண்மை தொடர்பான ஆலோசனைகளை அமைச்சரிடம் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேகதாது விவகாரம் தொடர்பாக முதலமைச்சர் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும் திரு. அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தினார்.

<<<<>>>>

இயற்கை பேரிடர்களால் பயிர்கள் பாதிக்கப்படும் காலங்களில் பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் விவசாயிகளுக்கு பெரிய நிவாரணத்தை வழங்கி வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் பதிவு நடைமுறை தற்போது நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Dhandapani - 50 Sec)**

<<<<>>>>

தமிழகத்தில் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்ய தவெக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று பிஜேபி தேசிய மகளிரணி தலைவர் திருமதி வானதி சீனிவாசன் குற்றம் சாட்டியுள்ளார்.

புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முந்தைய திமுக ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பு எந்த நிலையில் இருந்ததோ, அதேநிலையில் தற்போதும் நீடிப்பதாக கூறினார்.

ஊழலை ஒழிப்போம் என்று கூறிய தவெக ஆட்சியில் தற்போது முறைகேடுகள் தொடர்பான புகார்கள் அதிகரித்துள்ளதாக திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

<<<<>>>>

சென்னையில் சிறார்கள் வாகனம் ஓட்டினால் பெற்றோர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர காவல்துறை ஆணையர் திரு. அமல்ராஜ் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உரிமம் இன்றி வாகனம் ஓட்டுதல் மற்றும் சிறார்கள் வாகனம் ஓட்டுவதை தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

**(Voice Byte — Amalraj — 38 Sec)**

<<<<>>>>

மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் ஒரு சில இடங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் பிற பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் பல இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட **2** டிகிரி செல்சியஸ் வரை அதிகரித்து காணப்படும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ரஷ்யாவின் மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் மீது யுக்ரைன் ட்ரோன் மூலமாக தாக்குதல் நடத்தியுள்ளது.

-------------

இந்த ஆண்டு துரந்த் கோப்பை கால்பந்து போட்டிக்கான கோப்பைகளை குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று நடைபெறும்

நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு அறிமுகம் செய்கிறார்.

-------------

தலைநகர் தில்லியில் 70 லட்சம் மரக் கன்றுகள் நடும் திட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று தொடங்கி வைக்கிறார்.

-------------

தேசிய இளையோர் நாடாளுமன்ற போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால் பரிசுகளை வழங்கவுள்ளார்.

-------------

சென்னை அண்ணா நகரில் மேம்படுத்தப்பட்ட போகன்வில்லா பூங்காவை மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு செங்கோட்டையன் மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அருகே வெளிமாநிலத்திற்கு கடத்த முயன்ற சுமார் 4 டன் ரேஷன் அரிசியை காவல்துறையினர் வாகனத்துடன் பறிமுதல் செய்து, ஓட்டுநரை கைது செய்தனர்.

-------------

திருவள்ளூர் மாவட்டத்தில் வேளாண்மை உட்கட்டமைப்பு நிதியின்கீழ் விவசாயிகள் கடன் பெற விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் திருமதி கவிதா கூறியுள்ளார்.

-------------

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே புனித சிந்தாத்திரை அன்னை ஆலய திருத்தேர் பவனி ஆண்டு விழா விமரிசையாக நடைபெற்றது.

-------------

சென்னை சோழிங்கநல்லூர் மற்றும் பெருங்குடி மண்டலங்களில் நடைபெற்று வரும் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளை மாநகராட்சி ஆணையர் திரு சமீரன் ஆய்வு செய்தார்.

-------------

சென்னை மாநகராட்சி இணையதளத்தில் இதுவரை சுமார் ஒரு லட்சத்து 26 ஆயிரம் செல்லப் பிராணிகளின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு சுமார் 64 ஆயிரம் செல்லப் பிராணிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

-------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3-வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

நாட்டிங்காமில் இரவு 10 மணிக்கு இன்று தொடங்குகிறது.

--------------

சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டி வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மானவ் தாக்கர் - மனுஷ் ஷா இணை மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

**<<<<The End>>>>**